Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per
do per half col
do per Column

THE Hindu Organ

VOL. VIII அ-ம் புத்தகம். | JAFFNA, WEDNESDAY SEPTEMBER 2, 1896 | இந்துசாதனம். | கலியுகஉ சகசஅ கதகக செப்டம்பர் உவ | NO. 2 இலக் உ.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளில் பிரசுரிக்கப்படும்

ACKNOWLEDGMENT.

The Manager of the Hindu Organ begs to acknowledge with thanks the receipt of the following remitances from subscribers:—

Messrs.		Rs. Cts.
S. PoothaPillai ...	Maviddapuram	1/50
S. Chidambara Pillai ...	Trinco ...	2/00
K. Nagalingam ...	Rampavai ...	2/09
J. T. VelupPillai ...	Pelmadulla ...	5/00
R Swaminather...	Sunnakam...	1/75
A. Chuppiah ...	Alavetty...	1/00
S. Ponnampalam...	Potture...	2/00
K. Vairamuttu...	Thoppore...	2/00
A. Sabhanathy ...	Vavonia...	2/50
M Nagalingam...	Kandy...	1/00
S. Ponnuswamy Ayer...	Suthumalai...	1/75
A. Moothathamby...	Palai...	2/00
K. Arumukam...	Van-West...	1/50

NOTICE.

The Jaffna Commercial Corporation Litd Opens banking bussiness on Monday the 8th September 1896 at 10-30 A. M.

WM: MATHER.
Managing Director

THE JAFFNA COMMERCIAL CORPORATION LITD

OFFICE BANK HALL SEA STREET JAFFNA.

The Company Opens Current accounts with sums of not less than Rs. 100 and allows interest at 2 per cent per annum on minimum Monthly balances of Rs. 500 and upwards.

Fixed deposits received on following terms:—

For 12 months Interest at 5 0/0 per annum allowed
" 6 " " 4 " " "
" 3 " " 4 " " "

Approved bills discounted Money advanced on pledges.

Remittances can be made to and from Colombo

Colombo Bankers. Bank of Madras.

Cheques and foreign drafts and bills of exchange on the Colombo Banks cashed.

Island and foreign goods imported on commission. Office hours from 10-30 A. M. to 4 P. M.

WM: MATHER
Managing Director

BULK PETROLEUM INSTALLATION.

Delmege Forsyth and Co Agents, Colombo. Jaffna Sub-Agency, Messrs C K Chellappah Kandiah and Co. Grand Bazar Street where Best Refined Bulk Petroleum can always be procured at a cheaper rate than any other oil in the market.

WARD AND DAVY
NAVALAR KOTAM

AMERICAN TIME PIECES.

The best of Time Pieces. Guaranteed for 5 years use.

Riverside Alarm and Date Time Piece Rs 5/50.
Riverside Plain... ... ... „ 4/00
Riverside Mandolin... ... ... „ 4/50
Riverside Girl..... ... ... „ 4/50
„ Puff... ... ... „ 4/50

BEST REAL NICKEL WATCH CHAINS.

Money refunded if corrodes. Each Chain 2/50.

Ward and Davy

கூந்தல்வளர்தைலம்.

இது நன்றாக மயிரைவளர்த்து அழகாக்கும் விலை ரூ பா ௪—ரூ0.

சந்தனக்கலவைத்தைலம்.

இது வெள்ளைநோயால் வருந்துபவர்க்குக் கைகண்ட உன்மருந்து ரூபா உ.

சுகந்த பல்லுப்பொடி.

இது முகங்களைத் அடிக்கடி பல்லிலும் அசைவுமடைவலர்களுக்கு மெத்த நல்லது. பல்லுக்குக் காத வாய்நாற்றத்தை யெடுத்துவிடும் ஒருதரம் ஒருவருக்கு இரண்டுமாசத்துக்குப் போதியது. சதம ௨உ இ.

மௌமாராஞ்சனதைலம்

இது சபஸ்திரவாகடப்படி முடிக்கப்பட்ட தைலம். தாதுப்பெலமில்லாதவர்களும் கண் ரோகங்களுள்ளவர்களும் ஸ்நானமடண்ணிலரச் சுகமடைவார்கள். செர்ப்பவாயுவினால் சந்தானமின்றியிருக்கும் பெண்கள் தாம்பிட்டிய முழுகியும் வந்தால் தலைமயிர் தேகத்தழைவுடன் சந்தானவிருத்தியு முண்டாகும். இதமிப் பெர்பெற்றதைலம். விலை இருபத்தைந்து ரூபா. ஒருபோத்தல் இருபது முழுக்குமுக்காணும்.

☞ சுத்தமான கன்னூரி சோரோசனை குங்குமப்பூவும், எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளுமு விலை சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம் இரவிலும் மருந்துகள் விற்கப்படும்.

வாட் அன் டேவி
நாவலர் கிடு
யாழ்ப்பாணம்.

IN THE DISTRICT COURT OF MULLAITIVU

ORDER NISI

Testamentary Jurisdiction Class I. } No 9

In the matter of the Estate of the late Kanapatiyar Arumukam of Mallavi Deceased

Kanther Veluppillai of Mallavi Petitioner

Vs.

Sethuppillai widow of Arumukam of Mallavi for herself and on behalf of the minors
(1) Arumukam Kanthayah
(2) Arumukam Katpakam
(3) Arumukam Nakamuttu all of Mallavi Respondent

This matter of the Petitioner of Kanther Veluppillai of Mallavi praying for Letters of Administration to the Estate of the abovenamed deceased coming on for disposal before E. M. de C. Short Esq, District Judge, on the 8th day of August 1896, and the affidavit of the Petitioner dated the 8th day of August 1896 having been read, it is declared that the Petitioner is the brother-in-law of the said intestate and is entitled to have Letters of Administration to the Estate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 25th day of September 1896, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 10th day of August 1896

E. M. de C. SHORT
District Judge

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction } No. 786

In the Matter of the Estate of the late Tankamuttu wife of Moottatampi of Puloppalai Deceased

Sinnattampiar Moottatampi of Puloppalai Petitioner

Vs

Sivakurunatar Sanmukam of Puloppalai Respondent

This matter of the Petition of Sinnattampiar Moothatampi of Puloppalai praying for Letters of Administration to the estate of the above-named deceased Tankamuttu wife of Moottatampi of Puloppalai coming on for disposal before H H CAMERON Esquire District Judge, on the 19th day of August 1896 in the presence of Messrs CASIPPILLAI & CATHIRAVELU Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 20th day of July 1896 having been read it is declared that the Petitioner is the lawful husband of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 22nd day of September 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary

Signed this 19th day of August 1896
H. H. CAMERON
Distric Judge

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction Class I } No 783

In the Matter of the Estate of the late Sanmukam Sinnappo alias Sinnappapillai of Columbuturai Deceased

Sanmukam Kumarasami of Columputuaai Petitioner

Vs

1. Sanmukam Appakkuddi of Columputurai and
2. Sanmukam Kantaiya of Deyagama Agrapatna Respondents

The matter of the Petition of Sanmukam Kumaraswamy of Columputurai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Sanmukam Sinnappo Alias Sinnappapillai coming on for disposal before H H CAMERON Esquire, District Judge, on the 1st day of September 1896 in the presence of Messrs CASIPPILLAI & CATHIRAVELU Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 31st day of August 1896 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 5th day of October 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 1st day of September 1896
H. H. CAMERON
District Judge.

THE HINDU ORGAN.

—:o:—

JAFFNA, WEDNESDAY SEPTEMBER 2, 1896

THE HINDU COLLEGE.

—:o:—

This Institution was, as our readers are aware, registered as a grant-in-aid School in the begining of last year, and the first Government Examination was held in October last. There was so much opposition to its registration on the part of Missionary bodies who monopolised the education of youths in Jaffna that though it was then as it is now one of the leading educational institutions in the Peninsula, the Department was able to register it only as a Middle School on a vernacular basis. It is therefore referred to by Mr. Inspector Leembruggen in his report for 1895 as "The Vannarponnai East Boys English School." We are thankful to Government for recognising the claims of the Hindus of Jaffna to have an educational institution of their own,

உ

கணபதி துணை.

வாழ்வாவந்தணர்வானவராநினம்.....
வீழ்கதண்புனல்வேந்னதுமோங்குக.....
ஆழ்கதியெல்லாமரனுமமே.....
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.....

விளம்பரம்.

மலிவு! மலிவு! மண்ணெண்ணெய்.

டெல்மேஜ் போர்ஸைத் அன்று கம்பேனியாரின் கிழக்குசன்றுகளாகிய க.கா. செல்லப்பா, அ. கந்தையாவாகிய நாங்கள் யாழ்ப்பாணமுழுவதுக்கும் மற்றவர்களின் விலைக்கு மலிவாக மண்ணெண்ணெய் விற்போம் என்பதை அறிவிக்கின்றோம்.

இந்துசாதனம்.

அன்பு.

அன்பாவது தம்மோடு தொடர்புடையராய்த் தமக்கு இனியராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ள நெகிழ்ச்சியாம். தாய், தந்தை, மனைவி, மைந்தர், நண்பர் முதலாயினோர் சிலகாலத்தினுள்ளே இறக்கும் இயல்பினையுடையராதலினாலும், உயிரோடிருக்குங் காலத்துஞ் சிலபோது பொருள் கொடுத்தல் காரணமாக, அன்பு செயப்படுகின்றமையாலும், சிலபோது பொருள் கொடாமை காரணமாக அன்பு செயப்படாமையாலும் அவர்களிடத்துள்ள அன்பு மெய்யன்பன்று. பசுக்களாகிய நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று, நம்பிரயோசனஞ் சிறிதுங் குறியாது, நம்பிரயோசனங் குறித்த தொழிலகளாகவே கொண்டு பஞ்சகிருத்திய ஆனந்தநாண்டவஞ் செய்பவராய், நம்மோடு எக்காலத்துந் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளவர் பசுபதி எனப்படும் சிவபெருமான் ஒருவரேயாதலின், அவரிடத்திற்றானே செய்யப்படும் அன்பு மெய்யன்பாகும். யாவர்க்குமேலாம் அளவிலாப் பெருமையுடைய சிவபெருமான், யாவர்க்கும் கீழாயிருக்கின்ற அடியேனே ஓயாது என்றும் உபசரிக்கும் இயல்புடையரென்று சிந்திக்கச் சிந்திக்க, நமக்குச் சிவபெருமானிடத்து அன்பு விளையும். அன்பே சிவமென்பது திருமூலநாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருமந்திரத்தானும், தேவார திருவாசகாதிகளினாலும் இனிது துணியப்படும். "அன்பேயென்னன்பேயென்றன்பால் அழுதரற்றி அன்பே அன்பாக அறிவழியும் அன்பே" பழம் என்றும், தீர்த்தஸ்நானம், சிவத்தியானம், சிவார்ச்சனை என்பன முறையே பூ, அரும்பு, காய்களென்றும் சிவாகமங்கள் செப்புகின்றன. விரிந்த மனமாகிய வயலிலே, கபடமாகிய கற்குவைகளைப் போக்கி, அன்பாகிய பாத்தியைக் கோலி, மெய்ம்மை என்கின்ற எருவை இட்டு, பத்தி என்கின்ற வித்தை விதைத்து, ஆர்வம் எனகின்ற நீரைப் பாய்ச்சி, இடைவிடாது இடையூறுசெய்யு மியல்பினையுடைய ஐம்புலப் பசுக்கள் புகாமைப்பொருட்டுச் சாந்தம் என்கின்ற வேலியைக் கோலி, ஞானமாகிய முளை அங்குரித்து, கருணையாகிய தளிர் கான்று பொலிய, காமக்குரோதாதிகளாகிய களைகளைப் பிடுங்கிக் காக்கும்பொழுது செவ்விதாக அப்பயிரோங்கி மெய் சிலிர்ப்படைந்து, கண்ணீர் அரும்பி மலர்ந்து, பஞ்சாட்சரம் என்னும் காய் காய்த்து, சிறீகண்டமும், திரிநேத்திரமும், சதுர்ப்புயமும், ஐந்துமுகமும், பவளநிறமும் அடைந்து, வெண்ணிற விபூதியுந் தரித்து, அறுசுவையிலும் மிகுசுவையினைக் கொண்டு மாணிக்க இரத்தினத்தையொத்த நிறத்தினையுடைய பழமானது பழுத்துக் கைவர, பெரியோர்கள் அதை அருந்திக் களிப்புற்றிருப்பவும், சிறியவர்கள் இங்ஙனஞ் செய்யாது, மனம் என்னும் வயலைப் பாழாக்கி, இச்சையாகிய வித்தை விதைத்தபோது, அகங்காரமாகிய நச்சுமரம் முளைத்து, பொய்யாகிய கவகளைக் கொண்டு, பாவமாகிய பல இலைகளைப் பரப்பி, கொடுமை என்கின்ற பூவானது அரும்பி, கடுமையாகிய மலர் மலர்ந்து, துன்பமாகிய காய் காய்த்து, மரணமாகிய பழம் பழுக்க அதையருந்தி நரகத்திலே விழுந்து, தமக்கும் பிறர்க்கும் உதவாது அழியும், இயல்பினையுடையராகின்றார்களே! சிவபெருமான் விறகில் அக்கினி மறைந்திருக்குமாறுபோல, ஆன்மாக்களோறும் சர்வாந்தரியாமியாய் வியாபித்து நிற்பர். இங்ஙனம் வியாபித்திருக்கும் சிவபெருமானிடத்து அன்பு செ[illegible]ல் எமக்கருளிய சிவாகமங்களிற் கூறிய விதிவிலக்குகளை அவ்வன்பே காரணமாக அநுசரித்து நடந்து அவரது அன்பைப் பெற்று உய்யக்கடவர்கள்.

இதுவன்றோ தருமசிந்தை.

பழையிலே கெல்லு முதலிய சாமான்களை வைத்து விற்கும் வியாபாரிகளிலொருவராகிய ஸ்ரீ. ஆ. மூர்த்தி மப்பிள்ளை என்பவர், யாழ் சைவபரிபாலனசபையிலே பேரபிமானியென்பது இடைக்கிடை அவர் சிவசபைக்கு கன்கொடையாயும் தானமாயும் அளித்த பணத்தொகைகளை இப்பத்திரிகையில் அவ்வப்பொழுது வெளிவிட்டிருப்பதினால் எவருமறிந்திருப்பர். இவர் தமது கடையிலே, "சைவபரிபாலனசபை" என்ற பெயருடன் ஒரு உண்டிப்பெட்டி வைத்துத் தமக்குவரும் லாபத்தின் ஒருகூற்றை யதிலிட்டுவந்ததால் சென்ற மூன்றுமாசத்தில் சேர்ந்ததொகை ரூபா ஐந்து என்று சொல்லி அவ்வைந்து ரூபாவையும் சபைக்கு அனுப்பிவைத்தார். இவரைப்போல ஏனைய சைவவியாபாரிகள் ஒவ்வோருண்டிப்பெட்டி வைத்துத் தினம் அரைச் சதவீதமிட்டு வரினும் சிறுதுளி பெருவெள்ளமானதுபோலப் பெருந்தொகையாகி விடுமன்றோ. அப்பொருளைச் சபையாரிடங்கொடுத்துச் சபையார்மூலமாகப் பெருந்தருமங்களைச் செய்வித்துத் தமக்கும், தம்மூருக்கும் தம்சாதிக்கும் தம்சமயத்துக்கும் பெரும்புகழையுண்டாக்கலாமன்றோ, அன்பர்களே! இதைக்குறித்துச் சற்றே சிந்தியுங்கள். இவ்வாறே வித்தியாசாலைக்காரரும் செய்யக்கடமையுடையவர்களாக விருக்கின்றார்களெனச் சொல்லப் பிழையில்லேம். பாதிரிகள் வித்தியாசாலையில் வெள்ளிக்கிழமைதோறுங் கிறிஸ்தவர் ஒவ்வொருமாணவரும் ஒவ்வொரு சதம் உண்டிப்பெட்டியிலிடும் வழக்கத்தை உபாத்தியாயர்களும் மாணவர்களி லனேகரு மறிந்திருப்பர். வாரமொருதரம் கொடுக்க இயலாதாயின் மாசமொரு முறைதானுங் கொடுக்க வியலாதா, அளவெட்டி ஸ்ரீ அருணாசல உடையாரது வித்தியாசாலையில் இவ்வழக்கம் நடைபெறவில்லையா?

"ஈச்சுரநிச்சயம்"

இது, யாழ்ப்பாணம் நல்லூரைச்சேர்ந்த கொக்குவில் குடாதாசர் ஸ்ரீ. ச. சபாரத்தினபிள்ளை, உலகத்திலே கடவுளில்லை மறைவுளில்லை என்று பொய்வாதஞ் செய்பவர்களுடைய கொள்கைகளைத் தர்க்கநெறிகொண்டு மறுத்து எவ்வுயிர்க்கும் முதல்வராய் விளங்குங் கடவுளொருவ ருளரென்று எவருமறிந் துய்யும்பொருட்டு வேண்டிய நியாயங்காட்டி

"கடவுளுண்டெனக் காண்புறவழக்கை
அடைவுறநாங்கொளல் ஆர்கடனென்றது"
"கர்த்தனுண்டெனக் காண்பதுதானே
யுத்திகிசைந்ததென் றுண்மைசாதித்தது"
"தருபலனுண்டெனச் சாற்றுதனியாய
மரபெனுமாற்றம் வாதித்தரைத்தது"
"படைத்தனித்தழிக்கும் பரம்பொருளுண்மை
திடப்படநிறுத்தித் தெருட்டிநாட்டியது"

என்னுமின்னான்கு குத்திரத்தையும் விளக்கி வசன ரூபமாகச் செய்தது. இது டெமி எட்டுப்பக்க அளவினதாய் சுமார் பக்கங்களையுடைய ஓர்புத்தகம். இதில் சமயவிரோதிகள் செய்யும் அனேக ஆக்ஷேபங்களுக்கு விடைகளுண்டு. எவரும் வாங்கி நல்லாராய்வோடு பார்க்கவேண்டியதே. நமக்கனுப்பிய புத்தகத்தை மகிழ்வுடனேற்றோம்.

சமாசாரம்

காலநிலை:—இதுகாறுஞ் சொல்லிவந்தவாறே சொல்லக்கிடப்பதோடு வயிற்றுழைவு என்னுங் கொடிய நோய் அனேகரை வருத்துகின்றது.

வண்ணைப் பெருமாள்கோயில்:—இதன் மகோற்சவம் இந்மீ உகூ புதன்கிழமை தொடக்கம் நடக்கும்.

சுப்பிறீங்கோடு:—எம்மூர்ச் சுப்றீங்கோடு இம்மாசப் பிற்பகுதியில் நடக்கும். நாலைந்து வழக்குள் மாத்திரமேயுண்டாம்.

எங்கள் ஏசண்டர்:—கொழும்புக்குப் போயிருந்த இவர் சென்ற சனிக்கிழமை காலமே சமுசாரத்தோடு வந்துசேர்ந்தார்.

நமது பொலிசு இன்ஸ்பெக்டர்:—இப்பொழுது வந்திருக்கும் இன்ஸ்பெக்டர் இயன்றளவு தமது கடமைகளை நடாத்திவருகிறாரென அறிகிறோம்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல்:—இவர் சென்ற சனிக்கிழமை வந்து வடமாகாணப் பொலிஸ்பகுதிப் பரிசோதனை செய்கின்றார்.

ஸ்ரீ. ஞாயகனார் சி. வை. தாமோதரம்பிள்ளை:—இவருக்கு உண்டுபட்டிருந்த பிளவைக்கட்டுகொளுக்குநாள் சுகமடைந்தே வருகின்றது.

டாக்டர் எஸ். ஹல்லக்:—இவர் சலபாத்திலே உதவிக்கொலோனியல் சர்ஜனாக உத்தியோக உயர்வு பெற்றார்.

தானவரவு:—சைவப்பிரசாரகர் ஸ்ரீமத். க. சுப்பையர் தமது புத்திரனுக்குச் சாதகருமஞ் செய்தபோது ரூபா இரண்டு சை. ப. சபைக்குத் தானமாக அளித்து அனுப்பினர்.

புகைக்கப்பல்:—லேடிகோடன் காங்கேயன்துறையிலிருந்து வடக்குகோக்கி வருகிற சுவ யும், ஜப்பானியீ உவ யும், லேடி ஹவலக் தெற்குநோக்கி இம்மாசம் ௫௫ உகூ களிலும் புறப்படும்.

நல்லூர்க்கந்தசுவாமி கோயில்:—இங்கே திருவிழா சனங்களின் வசதிக்கேற்க உரியகாலத்து மிகச்சிறப்பாக நடந்துவருகின்றது. பானவேடிக்கையில்லாமற்போனதினாலுற்ற நன்மை எவ்வளவென்பதை யாவரும் நன்குணர்ந்திருப்பர்.

பானவேடிக்கை:—காட்சிக்கின்பம்பயந்து கடுங்கொலைக்கும் பெருஞ்செலவுக்கும் இடமான இக்கொடியசெய்கையை நிறுத்தவேண்டியதாவசியமென்பதை எவருமொர்த்துக்கொள்வர். ஆயினும் விலைகமற்றார் சிலர் பின்னும் தலையை ஆட்டிப்படுத்த எண்ணி உத்தரவுபெற அனேக முயற்சிகள் செய்கின்றார்கள். அரசினருத்தரவுகொடுப்பேமென்றவர்களைமறுத்துவிடுவோராயின் பெருநன்மைக்கேதுவாகுமன்றோ.

கோபம் பரமாயது—புலோலியிலே சென்ற வெள்ளிக்கிழமை இரவு ஒருவன் நித்திரையாயிருக்கும்போது பின்னொருவன் அவனது வயிற்றிற் குற்றிப் பெருங்காயப்படுத்தி மறைந்தனன். குற்றப்பட்டவன் குற்றுயிராயிருக்கிறான். குற்றினவனைத் தேடித் திரிகின்றார்கள். கடி.

"சிவத்துரோகக்கண்டனம்":—இது ஸ்ரீ. சி. தம்பையாபிள்ளையவர்கள் அச்சிடுவித்த "திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை" என்னும் நூலிற்குக் கண்டனமாக "யாழ்ப்பாணம் சங்கானை ஸ்ரீ. அ. வெற்றிவேற்பிள்ளையவர்கள் செய்து அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தியது. நமக்கனுப்பிய சொற்பியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டோம்.

கும்பாபிஷேகம்:—ஆனைக்கோட்டையிலே ஸ்ரீ. சுமசிவாய மூர்த்தியாரவர்களாற் கட்டுவிக்கப்பெற்றுக்கும்பாபிஷேகஞ்செய்த மூர்த்தகயினார்கோயிலென வழங்கும் சுப்பிரமணியசுவாமிஆலயத்தில், அவர்புத்திரர் ஸ்ரீ. இரத்தினசபாபதிப்பிள்ளை நித்தியகைமித்திகங்களுக்குரிய ஒழுங்குகளையும், அநேக திருப்பணிகளையும் செய்து ஆவணிமீ ௧௧வ புதன்கிழமையாகிய இற்றைத்தினம் குரியேகதயத்திலே சிவபெருமான் தேவி விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்து கும்பாபிஷேகஞ் செய்விக்கின்றார்.

டாக்டர் மு. கந்தையர்:—கண்டிப்பகுதியில் உதவிக்கொலோனியல் சர்ஜனாகவிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டு நல்லூரில் வசிப்பவராகிய இவர் இப்போது யாழ்ப்பாணக் கோட்டை டாக்டர் ஈ பெல் துரையுடைய இடத்தில் ஆட்டிங்காக வேலைபார்த்து வருகிறார். அவ்வேலையோடு பெரிய டாக்டர்தோணில் மன்னார்ப்பக்கம் போய்த் திரும்புமவரையும் அவருக்காகவும் ஆட்டிங்காக வேலைபார்த்து வருகின்றாரெனவுமறிகின்றோம். இவருடைய வைத்தியசாயத்தினாலுமே அரசினர்கருத்தைக் கவர்ந்ததென்பது சொல்லவேண்டா. இத்தனை நன்குமதிப்புடைய இவர் பிறவிஷயங்களில் காலம் போக்குவது வீணன்றோ.

பலிக்களகம்:—சண்டிருப்பாயிலே இரட்டையப்புலத்து வைரவாலயத்திலே அவ்வாலய கர்த்தர் அங்கோரத்தோடே சிலவருடங்களாக ஆடு கோழிகளை அறுத்துப் பலியிட்டுவந்தார்கள். அவ்வழக்கப்படி சென்றமாசத்திலும் அவ்விடத்திற் பலியிடுமாறு நூற்றுக்கணக்கான ஆடு கோழிகளைக் கொணர்ந்திருந்தார்கள். பலியிடும்நேரமானவுடன் ஆடறுப்பதினும் அதற்கிட்ட வரிகொடுப்பதினும் பிணக்குண்டாகி இருகூறியாகி ஏசமானருத்தரவை மீறிக் கண்டகண்டவிடங்களில் ஆடு கோழிகளையறுத்து வரியுமிறக்காது பலியிட்டுச் சென்றனர். அதனாலன்று பெருங்கலகம் விளைந்ததாம். இதனால் பலியிடுவோர் மறுவருஷத்தில் வரியிறுப்பதில்லையென்றும், வரிகறவிடுபவர் தமக்கதனால் வருவாயில்லாதிருப்பதனால் மறுவருடம் பலியிடவிடுவதில்லை யென்றும் சபதஞ் செய்திருக்கிறார்களாம். இந்த அவமானத்திலும் பலியிடமாற் றடுத்தவிடுவதன்றோ அவ்வதிபற்றடிகாரும். கண்டகண்டவிடமெல்லாம் உயிர்வதை செய்யப்படாதென்ற அரசசட்டத்தை அவ்வூர் விதானை கண்டு மறியார்போலும்.

கோச்சு ஒப்பந்தம்—யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளைவரைக்கும் ஓடிக்கொண்டிருக்கும் கோச்சு ஒப்பந்தம் இதுவரையும் நடாத்திவந்த ஸ்ரீ. ச. ஆசைப்பிள்ளை முதலானவர்களினாட்சியினின்று விலகிக் கொழும்பிலுள்ள பேற்ஸ் கம்பேனியாரி னாட்சிக்காகியது. இக்கம்பேனியார் சதகூ ம் ஸூ ம் ஸைமீ முதல் ௧௧௦ வருஷமிறதியாக இதை நடத்தும் உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள். இதற்கு வேண்டிய வண்டிதள் செய்யப்படுவதோடு குதிரைகள் வாங்குவதற்காக ஷை பேற் என்பவரின் புத்திரரொருவர் பம்பாய்க்குப் போகப் போகின்றாராம்.

பொய்க்கடிதம்:—யாரோ ஒருகுமோர்யர், "காரைதீவு வாசிகளாம், எமது கண்பர்களே!?" என்றும், "நம்பலகமம் ஓப் அப்பாசுவாமிக்குருக்கள்!" என்றும் நு-அ-கூ. ரும், கடு-அ-கூ ரும்மாக இருகடிதமெழுதி நமது கையொப்பக்காரரில் ஒருவராகிய தோப்பூர் அரசினர்வித்தியாசாலை உபாத்தியாயராகிய ஸ்ரீ. K. லவாமுத்து என்பவரது கையெழுத்திட்டு அவசியம் பத்திரிகையிற் பிரசுரித்தல்வேண்டுமென்றும், அவைசமயவளர்ச்சிக்குரியனவென்றும் எழுதியனுப்பினார். அக்கடிதங்களை அவரெழுதியிராரென்றசமுசயத்தால் அவரை எழுதிக்கேட்டோம். அவர் அவ்விதகடிதங்களை எழுதவில்லையென்று தெரிவித்தார். திரிகோணமலையில் இக்கேட்ட செய்கைக்குடன்பட்ட சில அயோக்கியப் பாலியருளரென்பதை முன்னுமறிந்திருக்கிறோம். பலகாட்கள்வன் ஒருநாளாகப்படுவானென்ற பழமொழியை இக்கடிதக்காரர் சிந்திப்பாராக.

காரைச் சுப்பிரமணிய வித்தியாசாலை:—இக்கே சிலவருடங்களாகத் தமிழோன்றேற்பிக்கப்பட்டு வந்தது. இதற்குப் பிரக்கிராசியார் ஸ்ரீ. வி. காசிப்பிள்ளையவர்கள் மானேசராயபிள்ளை, இங்கிலிசிலும் தமிழிலுமியன்றளவு வல்லராகிய ஸ்ரீ. இராமலிங்கபிள்ளையை உபாத்தியாயராக நியமித்து இங்கிலிசும், தமிழில் உயர்ந்தகல்விகளுங் கற்பிக்கப்படுவதோடு ச

ம்ஸ்கிருதமும் கற்பிக்கப்படுகிறது. இவ் வித்தியாசாலை இன்னுமிலியலடைந்தும், கல்வியினருமை தெரியாமையினாற்போலும் அவ்வூராரிலனேக அதன் விருத்தியை விரும்பாதவர்களா யிருக்கின்றார்கள். இதன் சொந்தக்காரராகிய ஸ்ரீ. சுப்பிரமணியபிள்ளை உபாத்தியாயர்களுக்கிலடைய யிருக்கும் பகையை பொழித்து சிரிப்பட கடாத்தங்கட்டமையும் அதிகாரமுமுடைய ராயிருந்தும் கவனியாதிருத்தல் தகுமா?

இந்தியாவோடிலங்கையை இணைத்தல்—பரம்பன் சால்வாய் அனுமார்பாலம் என்னுமிடங்களை இடையேயுள்ள கூவமல் தூரத்துக்கும் பாலங்கட்டி இந்தியாவோடிலங்கையை இணைக்கவேண்டுமென் றெழுந்த யோசனை இன்னும் கடந்துகொண்டே வருகிறது. இப்பால்த்துக்குச் செல்லும் செலவு உ.ஆ0,00,000 ரூபாவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

திருவனந்தபுரம் மகாராசா—மகாராசா அவர்கள் திவான்முதலானவர்களோடு சூலமீா உலவ புறப்பட்டு செய்யாற்றங்கரை, சுசீந்திரம் முதலான விடங்களுக்குச் சென்று ஆகாஸ்குள்ளவர்களாலேற்றமரியாதையோடு பெசரிக்கப்பெற்று ஆடி அமாவாசைப் புண்ணியதினத்தில் கன்னிமாகுமரியை யடைந்து சமுத்திர தீர்த்தமாடிப் பல தருமங்கள் செய்து அக்குறின்றும் புறப்பட்டு சுசீந்திரத்தையடைந்து சுவாமிதரிசனஞ் செய்து அன்று அங்கு சுவாமிக்குத் திருவிழாச் செய்வித்து ஆஸ்டமீ கூடவ திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார்கள். கடி.

நியூயார்க்:—இங்கே இவ்வாகஸ்டமீ ருடக்கும் கஅடக்கு மிடையில் குரியவெப்பத்தால் கஉ0 பேர் உயிர்துறந்தார்.

விலையுயர்ந்தசீலை:—நியூயார்க்கிலே ஐந்துயார்நீளமும், ஒன்றேகால்யார் அகலமுமுடைய ஒரு சருகைச்சீலையை செய்துமுடிக்க உ0,000பவுண்பிடித்தாம்

மயிருக்கு விலை:—பிரான்சுநாட்டுப் பழைய அரசனாகிய நெப்போலியன் சகோதரர்த்தியின் மயிர்க்கற்றையை வெந்தீயில் விற்றபோது ரூ0 பவுணாக விலைப்பட்டதாம்.

நூதனவள்ளம்:—பால்டிமோரிலே ஒருவர் புகையிலைச்சுருட்டு வடிவினதாக உருக்கால் ஒருவள்ளஞ்செய்து நீருக்குமேலே நீராவியாலும், நீருக்குள்ளே மின்சாரத்தாலும் இயக்கிப் போக்குவரவு செய்கின்றாராம். அது ஆறுபிரயாணிகளோடு இருபத்தைந்து பாகத்தண்ணீரின்கீழ் மணியொன்றுக்கு ௩0 மைல் வீதம் ௪0 மணி நேரம் பிரயாணஞ்செய்யுமாம்.

பின்னொருவள்ளம்:—புறூக்லின்நகரிலே ஒருவர் நிமிஷமொன்றுக்கு ஆறுமைலும், மணியொன்றுக்கு ௩௯0 மைலும் செல்லும் சக்தியையுடைய ஒருவள்ளத்தை இயற்றிப் பிரயாணஞ்செய்துநிரின்றாராம்.

குதிரைகள்—சென்ற ௩௯ வருஷங்களிலே இலங்கையி லிறக்குமுதலாகி விலைப்பட்ட குதிரைகள் ௧௭,௪:0.

யானைகள்—சென்ற ௩௯ வருஷங்களுக்கிடையே இலங்கைக்காடுகளில் பிடித்துப் புறதேசமனுப்பி விற்கப்பட்ட யானைகள் உ,உச0. இவற்றின் விலை ரூபா ௭,௪0,000.

கடிதற்குவிடை:—இதுவரையிற் பிரசுரமாகாதிருக்குங் கடிதங்கள் இனிமேற் பிரசுரம்பெறு. திருப்பி அனுப்பவும்படா.

கடிதம்

ஆரோக்கிய நாகரிகாபிவிர்த்திச் சங்கம்.
(LOCAL BOARD OF HEALTH AND IMPROVEMENT.)

—:0:—

மூகவுரைப்பெரிய சங்கம் யாதென்பதும், அது எம்மூரில் ஸ்தாபிக்கப்படின், நாமடையும் நன்மைகள், சலாகியங்கள் எவையென்பதும், இப்பத்திரிகையை வாசிப்பவருட் பெரும்பாலா றிந்திருப்பாரயினும், அறியாதாருஞ் சிலருளராதலால், அவைகளை நாமறிந்தமட்டு மெடுத்துக் காட்டுவாம்.

சங்கத்தினது நாமமே குறிக்குமாறு, பட்டினங்களை யாரோரகியன்திதியில் வைத்திருப்பதும், வேண்டிய திருத்தங்களைச் செய்து அவைகளைச் சிறப்பிப்பதும், இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென அரசினர் ஓர் சட்டமேற்படுத்தியிருக்கின்றனர். இச் சட்டப்பிரமாணங்களின்படியே, இச்சங்கம் ஸ்தாபனம் பெறும். அது ஆறங்கத்தவர்களை யுடைத்து. இவர்களில் மூவர் அரசாட்சியுத்தியோகஸ்தர்களாகவும், மற்றைய மூவரும் பெரும்பாலும் ஊரவர்களாற் றெரியப்பட்ட சுவாதீனப் பிரபுக்களாகவு மிருப்பார்கள். உத்தியோக அங்கத்தவரில் ஒருவராகிய கவண்மெண்ற் ஏசன்றர் அக்கிராசனபதியா யிருப்பார். சருங்கச் சொல்லில், இச்சங்கம் பட்டினத்துக்கு ஓர் சிற்றரசு என்னலாம். இச்சங்கம் தனது நோக்கத்தை யனுகூலப்படுத்திக்கொள்ளச் செய்யும் கருமங்களிற் சிலவற்றை யிங்கே கூறுவாம். (க) ரோட்டுகளைத் திறத்தல், வாய்க்கால்களை வெட்டுவித்தல், அவைகளைப் பழுதுபார்ப்பித்தல். (உ) அளவு நிறைகளுக்கேற்ற வெருமுங்குகளை யேற்படுத்தல். (௩) கடை சந்தைகளைக் கட்டுவித்து அவைகளுக்கேற்ற விதிகளை யுண்டுபண்ணுதல். (௪) பழுதுபட்ட மீன் இறைச்சி முதலியவைகளை விற்கவொட்டாது தடுத்தல். (௫) மிருகசாலிக்குத் திங்குவிளைத்தலைத் தடுத்தல். (௬) எல்லைகளைப் போடுதலு மவைகளைத் தற்காத்தலும். (௭) குளிக்குமிடங்களை யேற்படுத்தி யவைகளுக்கேற்ற பிரமாணங்களை யுண்டாக்கல். (௮) நாய்களைப் பிடித்தல். (௯) குடிசைகளை யல்லது வீடுகளைக் கட்டும்போது பேரிய பிரமாணமும் காற்று வசதியுமுள்ளனவோ [illegible] வனித்தல்.

பட்டினங்களிற் குடிகெருக்கமும் சனப்பெருக்கமுமுண்மையாதலால், இத்தகைச் சங்கமொன்று ஒவ்வொரு பட்டினத்திலும் ஸ்தாபிக்கப்படல் அத்தியாவசியகம். இச்சங்கத்தார் தலையிட்டுச் செய்யு மலுவல்களை அரசாட்சியார் தாமு மற்றைய எத்தனையோ கருமங்களோடு தர்கவாறு கடத்திவருதல் கூடாது. குடும்பத் தலைவனாகிய வொருவன், சிவனுர்த்தத்தின்பொருட்டு வெளியே சென்று வேண்டிய பிரயத்தனங்களைச் செய்துவர, அவன் மனைவியானவள் வீட்டினிடத்தே வேண்டிய சகல பணிவிடைகளையும் செவ்வே கடத்திவருதல் முறைமை. அங்ஙனமன்றித் தலைவன் தனது மற்றைய கருமங்களோடு வீட்டலுவல்களையுந் தானே பார்க்கவேண்டுமாயின், இலவகளில் யாதேனுமொன்றினுக்கு இடையூறு எய்தும். ஆகவே பட்டினஆரோக்கியவாதி கருமங்களை நடத்துவதற்கென ஓர் சபை வேறாயிருத்தல் தக்கது.

இச்சங்கம் வதனை, மட்டுக்களப்பு, திரிகோணமலை ஆகியாமிடங்களில் நடைபெற்று வர இங்கேயில் லாதிருப்பது யாது நியாயம்பற்றியோ நாமறியேம். மேலே சுட்டிய பட்டினங்களிலும் யாழ்ப்பாணம் எத்தனைப் பெரியது. இங்கே யாரோக்கியத்தாழ்ச்சியில்லையென்போமா திருத்தங்களுக்கு இடமில்லையென்போமா. சில தெருக்கள், கான்கள், ஒழுங்கைகள் எவ்வளவு அசங்கிதமான நிலையிலிருக்கின்றன. பறங்கிக்காரர் காலத்திற் கட்டப்பட்ட எத்தனையோ வீடுகள் நிலமடைந்து கிடக்கின்றன. அவைகள் என்ன நிலபரத்திலிருக்கின்றனவென்று கவனிப்பார் யார், முன்சின்னக்கடைக் கட்டடம் விழுந்து சில அபாயங்கள் நேரிட்டது யாதறியாத விஷயம். இச்சங்கமொன்று அக்காலத்தி லிங்கே யிருந்திருந்தால், அச்சம்பவம் நிகழ்ந்திருக்கமாட்டாது,

இச்சங்க ஸ்தாபனத்தால் எம்மூரவர்க்குண்டாகும் வேறோர் நன்மையுளது. அஃதாவது நம்மூர்க்காரியங்களை நாமே பார்த்துக்கொள்ளுதலாகிய சுயவாசியற்பயிற்சி யிதனுலுண்டாகிறது. கனடா, ஒஸ்றெலியா என்னுந் தேசங்கள், இங்கிலீசு அரசுக்குள் டமைந்தனவாயினும், சுதேசிகளே யாரசை நடத்திவருகின்றனர். கட்டளைச்சட்டங்களையும் வரிகளையும் நிரூபிக்கிறவர்களவர்களே. சகல உத்தியோகங்களிலு மமர்ந்திருப்பவர்களவர்களே. பிறதேசவாசிகள் அங்கு சென்று, உத்தியோகங்களிலமர்ந்து செல்வாக்கைச் செய்தவும், அத்தேசத்துப் பணங்களை வெளியே கொண்டு செல்லவும் எட்டுணையேனு மிடங்கொடார். இவையெல்லாம் சுய அரசியலுரிமை மேம்பாட்டால் உற்பவித்த நன்மைகளென்பது நாம் சொல்லவும் வேண்டுமா. இத்தேசங்களினது பதவியை நாமுமடையுங்காலை மென்றுண்டேயாயினும், அதை மிக எட்டவைத்தே பேசவேண்டியிருக்கின்றது. இருப்பினும் மேற்சுட்டிய சங்கமொன்றை எம்மூரிலு மேற்படுத்தித் தருமாறு அரசினரைக் கேட்டு, பெறும்வரையும் விடாமுயற்சியாய் நின்று, சித்தியானபின் முறைப்படி நடத்தி வருவோமாயின், அப்பதவியை யடையும் பக்குவம் லபித்தற்கு அடிகோலுபவராவோம். பிரசைகளாகிய நாமெல்லாம் பிள்ளைகளும், செங்கோண்மை தவறாத எமநிராக்கினியாருடைய அரசு அரிய பெற்றாருமாயிருக்கிறோம். பிள்ளைகள் பராயப்படும்போது பெற்றார் தங்கடமைகள் சிலவற்றை யவர்மேற் பொறுப்பித்தல் முறைமையே.

P. K.

அரசினர் கல்லெண்ணத்தோடேயே இச்சங்கத்தை ஸ்தாபித்தனர். அதற்கேற்படுத்திய சட்டமும் தக்கதே. நம்மூர்க்கு இச்சட்டம் அவ்வள வாவசியகமன்று. இது ஓர் குடிகெருங்கிய பட்டினமுமன்று. "மூலைக்குத்தைச் சலையறியுமா" என்றபடி ஒருவேளைகளுக்கு வழியற்றுப் பட்டினி கிடக்கு மேழைகளின் நிர்ப்பந்தத்தை இச்சங்கத்தா ருணரவேமாட்டார். சுதேசப்பிரபுக்கள் இதற்கங்கத்தவராவதால் பெருகுப் பெருமையேயன்றி ஊருக்கு வறுமையே யுண்டாகும். பத்.

பிரபஞ்சவிசாரம்.
(மாயாவாதிமதமறுதலை)
௩-ம் பக்கத்தொடர்.

அற்றன்று: பிரமம் பிரபஞ்சமாகத் தோற்றுவது சிவர்களுக்கே; இந்தச் சிவர்கள் தாமும் கானற்சலம் போற் தோற்றமாத்திரையின் அமைந்துள விபரீதக்காட்சிகளேயாம் என்பீரயின்; சிவர்களும் விபரீதத்தோற்றங்களாகுமேல். இவர்கள் இங்ஙனம் தோற்றுவது யாருக்கு? சிவர்களுக்கேயெனின், விபரீதக்காட்சிகள் எல்லாம் காண்பானது காட்சிமாத்திரையினுள்ள இல்பொருட்டோற்றங்களன்றித் தம்மளவில் உண்மைநிலை உடையனவல்ல. அதாவது, கானல் சலமாகப் புலப்படுமிடத்து, அங்கே சலம் என்பதோர் பொருள் உண்மையளவில் இல்லை. கானல்மாத்திரமே உண்மைப்பொருள். இது காண்பானது மயக்கவுணர்ச்சிக்குச் சலமாக விகற்பித்துத் தோன்றுவதாம். இங்ஙனமே இல்பொருளாய் அமைந்துளவிபரீதத்தோற்றத்தை உள்பொருளாகக் கொண்டு, அந்தப்பொருளுக்கு வேறு பிற விபரீதவுணர்ச்சிகள் சித்திக்கத்தகுரியன என்று வரிந்திட்டு நிற்பது மலடிமைந்தன் மன்றல் அயர்க்கதையை நிகர்க்குமென்க. சலம் எங்ஙனம் இல்பொருளோ அங்ஙனமே சிவர்களும் இல்பொருள்களாகும். ஆகுமேல் இந்தச் சிவர்களுக்கு விபரீதக்காட்சிகளாய் வேறும் பிற பிரபஞ்சமும் தோற்றும் எனச் சாற்றுதல் எங்ஙனம் நிலைபெறுமோ?

அற்றன்று இந்தக்காட்சிகள் சித்திப்பதெல்லாம் பிரமத்துக்கேன்னின், பிரமத்துக்கு விபரீதக்காட்சி சித்தித்தல் கூடாதென்பது மேலே விளக்கப்பட்டது.

கானற்சலத்தை நாம் பிரபஞ்சத்துக்கு ஒப்பிப்பது அதன் மயக்கநிலையை உணர்த்துமாத்திரைக்கேயன்றி அப்பால் அல்ல என்பீரயின், இந்தப்பொறியை இன்னும் அவிழ்ப்பதேனோ! கானல் சலமாகத் தோற்றுதற்குரிய தருதியுண்டு. எங்ஙனம்? இங்கே கானலை ஒருவன் கானலைக்கண்டு சலமென மயங்குகின்றானாயின், பிரபஞ்சக்காட்சியினும் இங்ஙனமாயதோர் தருதியுண்டோ? கானற்பனிநீர்க் காட்சி சித்திக்கலும் உளதாமோ? பிரமம் பிரபஞ்சமாக மயங்கித் தோன்றுமென்றால், அத்தோற்றத்தைக் கிளர்தற்குரியார் ஒருவர் வேண்டப்படுவார் அன்றோ. இந்தத் தருதி இல்லாவிடத்து இதுபோல் அதுவெனினும் இது அத்துணைக்கு இத்துணைக்கு என்றும் கடிதற்கு அமைவுண்டாகாதென்க.

பிரபஞ்சம் கயிற்றில் அரவுபோலும் ஓர் விபரீதக் காட்சி என்பதும் நமது கண்களுக்கு ஒன்று. இவர்கள் தமது விபரீதக் கொள்கையை நிறுத்துதற்பொருட்டுத் தாம் அறிந்துள விபரீதங்களை எல்லாம் ஒன்றொன்றாக எடுத்துக் காட்டி ஒன்றிலும் அனுகூலப்படுமின்றா ரல்லர். கயிற்றில் அரவு தான் காண்பான் ஒருவன் இன்றித் தோன்றுதற்குரியதாமோ? கயிற்றை அரவாக மயங்கிக் காண்பான் ஒருவன் உளனாயினன்றே இக்காட்சி சித்திக்கற்குரியது. இங்ஙனம் ஒருவன் இல்லையாயின் இக்காட்சி சித்தித்தல் சிறிதும் கூடாதன்றே. பிரபஞ்சக்காட்சியிலோ பிரமத்தையின்றிப் பொருள் பிறிதில்லையாக, அக்காட்சி சித்திப்பது யாருக்கோ? காண்பான் இன்றேற் காட்சியுமின்றாய் பிரபஞ்சத்தோற்றமும் இன்றாய் முடிந்துவிடுமே. ஆதலின் இக்கூற்றப் பொருந்தாதென்க. இனி காலாமகூற்றை ஆராய்வாம். வரும்.

குகதாசர்.

கிரிமலைச் சிவன்கோயில்.

ம. இராமலிங்கம் என்னும் பேரிலே மறைந்துநின்று ஒருவிண்ணப்பம் விடுத்தவருக்கு

உத்தரம்.

க. நீர் முதலாம் ஆவேதனங் கண்டீரன்றி இரண்டாம் ஆவேதனங் கண்டீலீர்! இரண்டாம் ஆவேதனத்தையும் அதன்பின் நிகழ்ந்த வரவு செலவுகளையும் ஆராய்ந்தறியாது இவ்வாறு எழுதுதல் கடவுநிலைமைதானு? நீர் பண்ணுலையிலுள்ளராயின், இவற்றை விவரமாய் அறியாமலிருக்கமாட்டீர்!

கோயிலுக்கும் வீதிக்கும் அப்பாலுள்ள தருமநிலங்களுக்கன்றிக் கோயிலிருக்கும் நிலத்துக்கும் வீதிநிலத்துக்குந் தருமசாதனம் அவசியமா! கோயிற் பிராகாரத்துக்குள்ளே விநாயகாலயம், சுப்பிரமணியாலயம், நிருத்தமண்டபம் முதலியன கட்டுவிப்பேரி அந்நிலம் கிரயத்துக்கு வாங்கித்தான் கட்டவேண்டுமா?

உ. ஒருவருடைய சோட்பாடுகள் காலத்துக்குக் காலம் மாறுவதும் முதலிலே மனத்தில் நிகழ்ந்த சந்தேகங்கள் பின் நிவிர்த்தியாதலும் இயற்கையாதலானும், மூலஸ்தானத்துக்கு என்று நிலங்கள் அழைப்பித்துக் கொடுத்த ஸ்ரீமான் சிவப்பிரகாசபிள்ளையவர்கள் மூலஸ்தானத்துக்கு பூர்வீகலிங்கத்தைத் தாபனஞ் செய்வதே தகுதி என்று ஒத்துக்கொண்டமையானும் இவ்விஷயத்திற் பிறர்க்கு விடை கூறவேண்டியதில்லை.

௩. இலிங்கத்துக்கு ஏற்பக் கோயில் கட்டுவதும், கோயிலுக்கு ஏற்ப இலிங்கம் அமைப்பதுமாகிய இரண்டும் காமிகாதி ஆகமவிதியாம். இவற்றுள்ளே, கோயிலுக்குப் பொருத்தம் என்னும் ஆகமவிதிகொண்டு துணிந்தே இந்நிலிங்கம் கொள்ளப்பட்டது.

மேலும் ஒரு க்ஷேத்திரத்தில் அழிந்துபோன ஆலயத்திற்குப் பதிலாகப் புதுக்கோயில் கட்டுவார்க்குப் பிரமாணவிதி அவசியமன்று.

௪. இப்போ தாபிக்கப்பட்ட அம்மன், கோயிற்பிரமாணத்திற்கு இயையச் செய்விக்கப்பட்டதன்றி வாணலிங்கத்திற்கு இயையச் செய்விக்கப்பட்டதன்று. ஆகவே கோயிற்குப் பொருத்தமாய் அமைந்த லிங்கத்திற்குக் கோயிற்குப் பொருத்தமான அம்மனும் பொருத்தமுள்ளதேயாம்.

௫. பிரமாக்கிரமூர்த்தி சிலாதாபிரண்டஸ்தாபனம் முதலியகிரியைகள், பூர்வீகலிங்கத்திற்குத் தாபனத்தின் முன்னரே செய்யவேண்டிய தென்னும் நியதியில்லை

௬. ஆதார சிலாஸ்தாபனஞ் செய்து, அதன்மேல் நாங்கு பிரமசிலைகளும், கந்தியாவர்த்த சிலைளும் கரட்டி அதன்மேல் மருந்து சாத்தி வைக்கப்படும் ஆவிடையார் கோமுகத்திரமட்டத் தளவிரிசைக்கு மேல் வருமா கீழ் வருமா என்பதைத் தக்க சிற்பிகளிடங் கேட்டறிக. அல்லது வேறு சிவாலயங்களிற் போய்க் கைகளாலே தடவிப் பார்த்தாவது அறிக.

௭. அராலிக் கலாபிரதாசரியருடைய காரிபம் அவரையே பலமுறை அவமானப்படுத்தியதை நீர் அறிந்திலீர் போலும்!

௮. விக்கிரமவருடத்திலே பிரதமசிலாஸ்தாபனத்திற்கு அழைக்கப்பட்ட குருக்கண்மார், பிரபுக்கள், வித்துவான்கள் இப்போது கும்பாபிடேகத்திற்கும் அழைக்கப்பட்டார்கள்.

௯. காமிகவிதி தைவிகலிங்கார்ச்சனைக்கு மாத்திரம் உரியதென்பதை எங்கே கண்டீர்? நீர் காமிகமும் அறியீர்என்பதை நுங்கேள்வியே புலப்படுத்துகின்றது.

௧0. இப்பிரதிட்டாதிக்கிரமங்களால் அபற்கிரமங்களுக்கெல்லாம் கேடுண்டாகும் என்றுதானு நீர் பண்ணுலையினின்றும் ஓடி ஒளித்துவிட்டீர்! யார்கண்ணுக்கும் நீர் நுவிவிடத்தில் அகப்படவில்லையே! நீர் எங்கள் கண்ணுக்கு வெளிப்படுவீர் அப்போது சொல்லலாம் என்று இதுவரையும் உத்தரம் எழுதாது தாமதித்தோம்.

மேற் கூறியவற்றிற்கெல்லாம் காமிகாகமம் முதலியவற்றுள்ள பிரமாணங்களுட் சிலவற்றை இவ்விடம் தமிழில் மொழியெயர்த்துத் தருகின்றோம். இனிமேலாவது கண்டு தேறக. பிரமாணச்செய்யுள்கள் ௧௮. மறுமுறைகளில் வரும்.

இங்ஙனம்
சோ. சந்திரசேகரக்குருக்கள்
நீர்வேலி.

articularly to Mr. Leembruggen for his pathetic references to it in his report. He writes:—

"The Vannarponnai east Boy's English School, under the management of Mr. S. Nagalingam is a fairly large middle school on a vernacular basis. It was established to meet the educational needs of the large Sivite population of Vannarponnai and the neighbourhood. It was examined for a grant-in-aid during the year. The results of the examination compare favourably with those of other schools of the same grade. A great deal of opposition was offered to the registration of this school, but its acceptance by the Department has not, I am led to believe, sensibly affected the attendance of old established schools in its vicinity."

ANIMAL SACRIFICE IN JAFFNA.

(communicated)

The practice of offering animal sacrifices is supposed to have existed among men in their primitive stage, and all such wild habits peculiar to the primitive man are expected to disappear before the dawn of civilization. But it is very painful to find that the case is otherwise in Jaffna, although the place is reputed to be the stronghold of Hinduism which preaches a crusade against taking of animal life.

Lage numbers of animals—chiefly goats and fowls—are slaughtered annually in various parts of the peninsula in a most horrible and frantic manner, and that too in the presence of a large concourse of people, under the pretence of appeasing some Deity or other. The practice is mostly confined to the ignorant masses and lower classes; and it may be said that the practice is gaining ground every year instead of declining and ultimately dying out.

The festival of offering animal sacrifices commences in March or April and lasts up to September or October. Sheds are put up under a banyan or tamarind tree where a *Kali* or *Bairava* is supposed to preside, and on the day appointed, people flock in from various directions—some with a goat, some with a fowl and others with the object of enjoying the scene. The animals—numbering in many cases between five and six hundred—are most brutally slaughtered in open day light and in the presence of an immense crowd consisting of men and women, children and adults, upon whose mind the festival is sure to implant a demoralizing tendency.

The scene is too atrocious to be adequately described. The goat is dragged on one side with a rope attached to its neck and on the other side with its two hind legs, where the massacring hero steps in with a hideous knife and goes on striking as many blows as his physical strength and the sharpness of the knife would require for the purpose of severing the head—the poor creature in the meantime struggling for life and striving hard to get off in a most pitiful manner. The fowls are chopped off, their heads and thrown aside and their trunks may be seen flying in the air until the life is totally extinguished. The bleating of the terrified goats and the chuckling of the awestricken fowls combined with the hubbub of the noisy crowd present a frightful scene. Blood may be seen running in streams over the sacrificial ground and the clothes and clothing of the by—standers are more or less soiled with blood. I may safely say that not less than 50,000 animals are slaughtered every year in this fanatic style, and it is high time that such a state of things must be put a stop to.

The Society for the prevention of cruelty to animals must take some immediate steps to prevent this anomalous torture and bloodshed. Common sense would forbid any sane man from having recourse to a practice like this, and still it is a wonder that the practice has been going on in Jaffna for many years past and no notice seems to have been taken of this very objectionable state of things.

There was a time when the suttee system was itself considered to have the sanction of religion, and the ignorant masses will always try to take shelter under their religion when they are detected in any filthy practice. But if the question is fully sifted it may be found that the practice is only the outcome of ignorance and superstition and that religion had nothing to do with it.

Sir William Twynam, our late Government Agent had sometime back the opportunity of witnessing one of these scenes, and he was greatly shocked at this horrible torture.

I think the government should take some notice of this anomalous practice and try to put a stop to it, as it tends greatly to demoralize the people at large.

LOCAL AND GENERAL.

The Weather—The drought still continues, and its evil and destructive effects are felt equally by man beast and vegetation Our fields were sown last year in August, but this year they have not been even ploughed and manured yet preparatory to sowing, owing to want of rain

The Government Agent—Mr. and Mrs. Ievers with the Chief Mudaliyar returned to Jaffna from Colombo on Saturday last by a native vessel.

The Puttoor Well—The pumping out of the water of this well was resumed on the 31st Ultimo and will be continued till today. The experiment has proved we learn, that there is an inexhaustible supply of fresh water in this well sufficient to the needs of the Jaffna Town. We hope early steps will be taken to supply this town with pure drunking water from this well.

Personal—Mr. Advocate Tirunavukarasu who came to Jaffna on a visit to his friends and relations has returned to Colombo by the last trip of the Lady Havelock.

—Mr. Murugasa Pillai, Superintendent of Roads under the Municipality of Singapore, who came to Jaffna last month on account of the sad death of Mrs Murugasapillai to whom he was married about a year ago, has returned to the Straits after performing the Anthiaddy and other ceremonies here.

—We are glad to learn that Dr S Hallock L R. C P, & S. Edinburgh and L F. P & S. Glasgow, Deputy Asst: Colonial Surgeon stationed at Chilaw has been promoted to an Asst: Colonial Surgeoncy from the latter part of last month.

—Dr. M Candiyah, retired sub-assistant Colonial Surgeon is now in charge of the Senior Medical Officer's office here, Dr. Thorn hill having gone to Mullaitivu on circuit and Dr. Ebell having gone to Colombo on leave.

Fire Wood—We hear serious complaints from all classes of people regarding the vexatious conditions under which firewood could now be punchased here from the Government. We hope our Government Agent will redress this grievance as soon as possible, as he will find that this complaint proceeds not from one section of the people but from the whole people of the Town and its suburbs.

The Supreme Court—The second Criminal Session of the Supreme Court for the year 1896 will commence here on the 18th Instant. There are only four cases on the Calendar It is likely two more will be added we understand.

RAMBLING NOTES.

I see the Jaffna Commercial Corporation is to do business in a grand and business-like style. The general meeting will be held on the 8th Inst when I think several important business matters will be discussed. I venture to suggest at this time that the amount of capital be raised a little. The promoters of this corporation might say that it is impossible; to which I tell them to recall to their minds what Napolean said of the word "impossible"

So the Jaffna Railway is not a "tautalizing vision" I learn from a very high authority that His Excellency the Governor has 'decided' to open the Railway to Jaffna and that we will have our Railway soon. And it is a piece of pleasant news to hear that the Jaffna Railway question does not hang on the three word, "will it pay."

Mr. Pate and a Coast Moorman came to Jaffna on the 1st Inst by coach and. I hear from a very reliable source, proposed to buy the whole stock in trade consisting of horses, coaches, bulls &c from the present Contractor. But Mr. Pate learning from him that he did not like to part with them as he intends to run a private coach between Jaffna and Matale he (Mr. Pate) left Jaffna the next day that is yesterday to Colombo. So what appeared in the local TIMES about Mr. Pate sending his sons to India to buy horses seems to be a canard.

I am glad to see that 4 Colleges out of 5 in Jaffna have joined together and formed a union under the name of "Inter-Collegiate Union." It is a very grand idea indeed The members are elected from the Entrance, F. A. and B. A classes and the masters of higher forms. A meeting was held in that spacious hall of the "Hindu College" on the 22nd Ultimo and on that day Mr. Chelva Rayan, who was keeping terms in Lincons Inn, London and is on a visit to his native place, delivered a lecture on the Social Evolutions of the West The next meeting I hear will be held on the 3rd week of this month at the Jaffna College, Batticotta.

Wanderer.

EXTRACT.

SWAMI VIVEKANANDA IN LONDON.

(INDIA)

During the London season, Swami Vivekananda has been teaching and lecturing to considerable numbers of people who have been attracted by his doctrine and philosophy. Most English people fancy that England has a practical monopoly of missionary enterprise, almost unbroken save for a small effort on the part of France. I therefore sought the Swami in his temporary home in South Belgravia to enquire what message India could possibly send to England, apart from the remonstrances she has too often had to make on the subject of home charges, judicial and executive functions combined in one person, the settlement of expenses connected with Sudanese and other expeditions.

"It is no new thing," said the Swami composedly, "that India should send forth missionaries. She used to do so under the Emperor Asoka, in days when the Buddhist faith was younger, when she had something to teach surrounding nations."

"Well, might one ask why she ever ceased doing so, and why she has now begun again?"

"She ceased because she grew selfish, forgot the principle that nations and individuals alike subsist and prosper by a system of give and take. Her mission to the world has always been the same. It is spiritual, the realm of introspective thought has been hers through all the ages, abstract science, metaphysics, logic, are her special domain. In reality my mission to England is an outcome of England's to India. It has been hers to conquer, to govern, to use her knowledge of physical science to her advantage and ours. In trying to sum up India's contribution to the world, I am reminded of a Sanskrit and an English idiom. When you say a man dies, your phrase is. 'He gave up the ghost,' whereas we say, 'He gave up the body.' Similarly, you more than imply that the body is the chief part of man by saying it possesses a soul. Whereas we say a man is a soul and possesses a body. These are but small ripples on the surface, yet they show the current of your national thought. I should like to remind you how Schopenhauer predicted that the influence of Indian philosophy upon Europe would be as momentous when it became well known, as was the revival of Greek and Latin learning at the close of Dark Ages. Oriental research is making great progress; a new world of ideas is opening to the seeker after truth."

'And is India finally to conquer her conquerors"?

"Yes, in the world of ideas. England has the sword, the material world, as our Muhammadan conquerors had before her. Yet Akbar the Great became practically a Hindu; educated Muhammadans, the Sufis, are hardly to be distinguished from Hindus; they do not eat cow, and in other ways conform to our usage. Their thought has become permeated by ours."

"So that is the fate you foresee for the lordly sahib? Just at this moment he seems to be a long way 'off it.'

"No, it is not so remote as you imply. In the world of religious ideas the Hindu and the Englishman have much in common, and there is proof of the same thing among other religious communities. Where the English ruler of civil servant has had any knowledge of India's literature, especially her philosophy, there exists the ground of a common sympathy, a territory constantly widening. It is not too much to say that only ignorance is the cause of that exclusive—sometimes even contemptuous—attitude assumed by some."

"Yes, it is the measure of folly. Will you say why you went to America rather than to England on your mission?"

"That was a mere accident—a result of the World's Parliament of Religions being held in Chicago at the time of the World's Fair. instead of in London as it ought to have been. The Raja of Mysore and some other friends sent me to America as the Hindu representative. I stayed there three years, with the exception of last summer, and this summer, when I came to lecture in London. The Americans are a great people, with a great future before them. I admire them very much, and found many kind friends among them. They are less prejudiced than the English, more ready to weigh and examine a new idea. to value it in spite of newness. They are most hospitable too; far less time is lost in showing one's credentials, as it were. You travel in America, as I did, from city to city, always lecturing among friends. I saw Boston, New York, Philadelphia, Baltimore, Washington, Desmoines, Memphis, and numbers of other places."

"And leaving disciples in each of them?"

"Yes, disciples, but not organisations. That is no part of my work. Of these there are enough in all conscience. Organisations need men to manage them; they must seek power, money, influence. Often they struggle for domination, and even fight."

"Could the gist of this mission of yours be summed up in a few words? Is it comparative religion you want to teach?"

"It is really the philosophy of religion, the kernel of all its outward forms. All forms of religion have an essential and a non-essential part, If we strip from them the latter, there remains the real basis of all religion, which all forms of religion possess in common. Unity is behind them all. We may call it God, Allah, Jahve, the Spirit, Love, it is the same unity that animates all life, from its lowest form to its noblest manifestation in man. It is on this unity we need to lay stress, whereas in the west, and indeed everywhere, it is on the non-essential that men are apt to lay stress. They will fight and kill each other for these forms, to make their fellows conform. Seeing that the essential is love of God and love of man, this is curious, to say the least."

(To be continued)

PRINTED AND PUBLISHED BY V. CHUPPIRAMANIA PILLAI FOR THE PROPRIETOR AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE JAFFNA.